# பூஜை முறைகள்

## From the
## VYASA BHARATA AGAMA SHILPA SADAS
## held at Ilayathangudi, Tamilnadu in 1962

சிவாகமப்படி எந்தப் பூஜையை எடுத்துக்கொண்டாலும் பஞ்சாசனம், பஞ்சாவரணமேதான் வரும். சிவாகமத்தில் பஞ்சாவரண பூஜையே விசேஷமாக உண்டு. சாக்தம் முதலான மற்றச்சாஸ்திரங்களில் சப்தாவரண பூஜை, நவாவரண பூஜைகள் உண்டு. இங்கே விசேஷமாகக்கொள்ளப்படுகிறது பஞ்சாவரண பூஜை. பஞ்சாஸனம் அதன்மேல், பஞ்ச ஆவரண பூஜை நிகழும்.

ஆத்மார்த்தமாகவோ, பரார்த்தமாகவோ எப்படி பூஜை செய்தாலும், குறிப்பிட்ட முறையைக் கொண்டே செய்வார்கள். பஞ்ச ஆசனம் என்பது ஐந்து ஆசனங்களின் மேல் இறைவன் இருப்பதாகக் கொள்வது. முதலாவதாக ஆனந்தாசனம், அதற்கு மேல் சிம்மாசனம், அதற்கு மேல் யோகாசனம், அதற்கு மேல் பத்மாசனம், அதற்கு மேல் விமலாசனம். இந்த ஐந்து ஆசனங்களுக்கு மேல் இறைவன் இருக்கிறான். இதனை உணர்ந்து பூஜை செய்ய வேண்டும். அந்த ஆசனங்களுடைய வடிவங்கள் தனித்தனியே

குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த ஆசனங்களில் யார் யார் இருக்கிறார்கள் என்பதையும், அந்த ஆசனங்கள் எந்த நிலைமையில் உள்ளன என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பிரிதிவி முதற்கொண்டு சிவ தத்துவம் ஈறாக முப்பத்தியாறு தத்துவங்களுக்கு மேல் இருக்கிறான் இறைவன். அந்த முப்பத்தியாரு தத்துவங்களுக்கு உட்பட்டவை இந்த ஐந்து ஆசனங்கள் என்பதை ஆசாரியன் முதற்கண் நினைத்து கொள்ளவேண்டும். அவன் நிற்கும் நிலை, இறைவன் இருக்கும் இடம் என்பதை உணருகிற போது, முப்பத்தியாரு தத்துவங்களுக்கு மேல் இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து வழிபாடு செய்ய வேண்டும். இதைத்தான் "ஸ்தித்யாதி குடிலாபர்யந்தம்" என்றார். குடிலா சக்தி என்பது பராசக்தி. ஸ்திதி என்பது பிரிதிவி. ஆதார சக்தி என்று நாம் கூறுவோம். இதற்கும் பஞ்ச ஆஸன பூஜை என்று பெயர். இதற்குள் எல்லாத் தத்துவங்களும் அடங்கிவிடுகின்றன. இன்ன இன்ன தத்துவங்கள் வரை, இன்ன இன்ன ஆஸனம் அமைந்திருக்கிறது என்பதை, கிரந்தங்கள் விரிவாகக் கூறுகின்றன.

ஐந்து ஆஸனங்களுக்குமேல் இருக்கிற இறைவனை எவ்வாறு பார்க்கவேண்டும் என்றால், அவனை மந்திரமாக ஆக்கி, நிஷ்கலமான மூர்த்தியை ஸகலமாக ஆக்கி, மந்திரமயமான சரீரம் உடையவராக ஆக்கியே வழிபட வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இறைவனுக்கு நம்மைப்போன்ற மாமிச தாதுக்களாலான சரீரம் கிடையாது.

பூஜைகளுக்குப் பிரதானமாக இருப்பது நியாசம். சாக்தத்திலும் சரி, வைஷ்ணவத்திலும் சரி, சிவாகமத்திலும் சரி, நியாஸம் இல்லாத பூஜை இல்லை.

"ந்யாஸம் விநா பவத் மூக:" என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்ற காரணத்தால், பூஜையில் நியாஸம் மிகவும் சிறந்ததாக விளங்குகிறது. இந்த நியாஸத்தின் வழியாக இறைவனுக்குக் கை கால் அங்கங்களோடு கூடிய உருவத்தைக் கற்பனை பண்ணிப்பூஜை செய்ய வேண்டும்.

முதலாவதாக, ஸ்தூலமான கற்பனை பண்ணும் நியாஸம். ஈசானம் முதலான மகா மந்திரங்கள் ஐந்தையும் அவனுக்குத் தலை, கண்டம், மார்பு, நாபி, கால் ஆக எண்ணி அவற்றோடு ஐந்து கலைகளையும் சேர்த்து, அந்த உருவத்தைக் கெட்டியாக்குகிறார்கள். "நிவ்ருத்யாதி ஜாநுபர்யந்தம்" என்று இதைக் கூறுகிறார்கள். நிவ்ருத்தி கலை

என்பது இறைவனுடைய முழங்கால் வரையிலும் உள்ள அவயவங்களாக இருக்கிறது. அதற்குமேல் நாபி வரையில் பிரதிஷ்டா கலை இருக்கிறது. அதற்குமேல் ஹ்ருதயம் வரையில் வித்யா கலை இருக்கிறது. அதற்குமேல் கண்டம் வரையிலும் சாந்தி கலையும், அதற்குமேல் சாந்த்யாதீத கலையும் ஆகிய வடிவம் தோன்றுகிறது என்று ஸ்தூலமாகக் கற்பனை செய்யவேண்டும்.

அதன்பிறகு , அஷ்டத்ரிம்சத் கலாந்யாஸம். முப்பதிஎட்டு மகா மந்திரங்களினால் தொடுக்கப்பட்ட நியாஸத்தை இறைவனுடைய நுட்பமான அவயவங்கள் கூறுகின்றன. அதற்கு மேல் மாத்ருகா ந்யாஸம் என்ற இன்றியமையாத நியாஸத்தை இறைவனுக்குச் செய்யவேண்டும். இதில் என்ன கூறுகிறார்கள் என்றால், மூலாதாரம் என்று ஒரு ஸ்தானம். இந்த மூலாதார ஸ்தானத்தில் நான்கு இதழ்களோடு கூடிய ஒரு கமலம். “வ, ஸ, ஷ, ஹ” என்ற அக்ஷரங்கள் அவற்றில் பதிக்கப்பட்டிருக்கின்றன. அதன்மேல் சித்ர லக்ஷ்மி, வல்லபை என்ற இரண்டு சக்திகளோடு மகா கணபதி விளங்குகிறார்.

இதுமாதிரி ஆறு ஆதாரங்களுக்கும் லட்சணங்கள் இருக்கின்றன.

அடுத்தபடியாக உள்ள மேல் ஸ்தானத்தில் பிரம்மா, காயத்திரி, சாவித்திரி என்ற இரண்டு சக்திகளோடு விளங்குகிறார். அதில் ஆறு

அக்ஷரங்கள் இருக்கின்றன. இது ஸ்வாதிஷ்டானம். அதன்மேல் மகாவிஷ்ணு. அவருக்குப் பத்து அக்ஷரங்களோடு கூடிய நிலை இருக்கிறது. லஷ்மி, தரை என்ற இரண்டு சக்திகளோடு இதயமாகிற இடத்தின்கண் மணிபூரக ஆஸனத்தில் பத்து அக்ஷரங்களோடு விஷ்ணு விளங்குகிறார்.

அதற்குமேல் அநாஹதம் என்னும் ஸ்தானத்தில், 'க' முதலான அக்ஷரங்களோடு கூடிய கமலத்தில், பரமேசுவரன், கௌரி, அம்பிகை என்னும் இரண்டு சக்திகளோடு விளங்குவதாகக் கல்பித்துக் கொள்ளவேண்டும்.

அதற்கு மேலே விசுத்தி என்ற ஸ்தானம் இருக்கிறது. அந்த ஸ்தானத்தில் பதினாறு இதழோடு கூடிய கமலம். அகாராதி பதினாறு அக்ஷரங்கள் பதித்த கமலத்தில், உன்மாதினி, வாக்வாதினி என்னும் சக்திகளோடு பரமேசுவரன் விளங்குகிறான் என்று கல்பித்துக்கொள்ள வேண்டும்.

அதற்கு மேலே ஆஜ்ஞை என்னும் ஸ்தானத்தில் இரண்டு அக்ஷரங்கள் இரண்டு இதழ்களோடு கூடிய கமலத்தில், பராசக்தியுடன் பரமசிவன் எழுந்தருளியிருக்கிறான்.

அந்தர் மாத்ருகாநியாஸம் என்னும் இதை உணர்ந்து இறைவனுடைய உள்ளே மூலாதாரம் முதல் பிரம்மரந்திரம்

வரையில் உள்ள நிலையை அமைத்து இந்த அக்ஷரங்களையெல்லாம் பதியவைக்க வேண்டும். பிறகு பஹிர் மாத்ருகா நியாஸம் என்பதன் மூலமாக வெளியிலுள்ள ஆகாரத்தையும் அமைத்துக் கொள்ளவேண்டும். அப்புறம் வித்யா தேசம் என்று ஒன்று உண்டு. அதன்மூலம் இறைவனைத் தியானம் செய்யவேண்டும் என்பர்.

பூஜைக்கு இன்றியமையாதவை நான்கு:

1. பூஜை
2. தியானம்
3. ஜபம்
4. ஹோமம்

பூஜையைப் பற்றிப் பார்த்தோம்.

தியானப் பகுதியைத்தான் முக்கியமாக வற்புறுத்தியிருக்கிறார்கள். இறைவன் சித் முதற்கொண்டு, குடிலா சக்தி பரியந்தமான ஐந்து ஆஸனங்களின் மேல் இருக்கிறான். மந்திரங்களினாலான சரீரத்தோடு விளங்குகிறான். இறைவனுடைய திவ்ய மங்கள ஸ்வரூபம் சுத்த ஸ்படிகம் போல இருக்கிறது. அவன் பதினாறு வயதுடைய இளைஞனாக இருக்கிறான்.

ஈசுவரன் ஐந்து முகம் உடையவனாக இருக்கிறான். ஸர்வதோ முகமாக இருக்கக்கூடிய அவனுக்கு ஐந்து முகம் என்று குறிப்பிடுவது, மந்திர முகமான முகங்களைத்தான். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற இந்த மந்திர முகங்களே இந்த ஆகமத்துக்கு இன்றியமையாதவை. இத்துடன் இன்னும் ஆறு மந்திரங்கள் சேர்ந்தால், அவற்றை ஸம்ஹிதா மந்திரங்கள் என்பர். இந்த ஸம்ஹிதா மந்திரங்களுடன் முன்னால் ஓர் எழுத்துச் சேர்ந்தால், அதற்கு'ப்ராஸாதம்' என்று பெயர்.

எவ்வளவு பெரிய யானையாக இருந்தாலும் எவ்வாறு பாகவனுக்குக் கட்டுப்பட்டு வருகிறதோ, அதைப்போல மந்திரமயமான ஆசாரியனிடத்தில் இறைவன் கட்டுப்பட்டு வருகிறான். அவனுடைய பக்திக்கு வசப்பட்டு, 'வா' என்றால் வருகிறான்: 'போ' என்றால் போகிறான். பாவனா முத்திரைகளினால் இப்படிக் கல்பனை பண்ண வேண்டும். "மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:" என்கிறார்கள் அல்லவா? மனத்தினால் எல்லாவற்றையும் கல்பனை பண்ண வேண்டும். இறைவனுடைய ப்வ்வொரு முகத்துக்கும் மும்மூன்று கண்கள். அவனுக்குத் திரிலோசனன் என்று பெயர்.

பிறகு இறைவனுடைய ஆயுதங்களைத் தியானிக்க வேண்டும். அவன் கைகளில் எது எதில் என்ன என்ன ஆயுதங்கள் இருக்கின்றன என்ற விவரம் இருக்கிறது. இப்படி இறைவனைத் தியானம் பண்ணுகிறபோது, சர்வ அலங்கார பூஷிதனாகத் தியானிக்க வேண்டும். லிங்கரூபமாக இருக்கும் இடத்தில், அந்த லிங்க புத்தி விட்டுக் கல்பனை செய்து கொண்டு பூஜை பண்ணவேண்டும்.

லட்சியந்தான் தெரியவேண்டுமே தவிர, மற்றச் சாதனம் ஒன்றும் அவனுக்குத் தெரியக்கூடாது. லட்சியமான பக்தி, இவனுக்கு நிலைத்து வரவேண்டுமானால், லிங்க புத்தி ஒழிந்து, அவன் ஸர்வேசுவரன் என்ற நினைப்பே வரவேண்டும்.

அதற்குமேல் ஈசுவரனை இந்த இடத்தில் ஆவாகனம் பண்ணுவதற்கான சில மந்திரங்கள் சொல்லப்படும். நியாஸத்தால் பகவானுடைய அவயவங்களைக் கல்பனை செய்துகொண்டு, பூர்ணமாக அந்த அவயவங்கள் வந்துவிட்டதாகத் தியானத்தில் நினைத்துப் பார்த்த பிறகு அவனுக்கு ஆவாகனம் செய்யவேண்டும். மூர்த்திக்கு இயல்பாக உருவம் இல்லை. தியானம் மிகவும் அவசியம். தியானத்தால் அந்த மூர்த்தி கண்ணுக்குள் நிற்க

வேண்டும். அந்தத் தியானத்துக்குச் சில ச்லோகங்கள் இருக்கின்றன.

ஒரு சின்ன ச்லோகம் பால கணபதியின் உருவ வருணனையைச் சொல்கிறது. கையில் கதலீபம், மோதகம் இவற்றுடன் இருக்கிறாராம். எவ்வளவு அழகாக நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது, பாருங்கள். இப்படித் தியானம் செய்தால் ஏன் விநாயகர் துதிக்கையோடு நம் முன் வரமாட்டார்?

மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றும் பூஜைக்கு இன்றியமையாதவை.

1. மந்திரத்தை நியாஸம் பண்ண வேண்டும்.
2. கிரியைச் செயலில் காட்ட வேண்டும்.
3. பாவனையினால் தியானம் பண்ண வேண்டும்.

தர்க்கத்தில் ஏழு பதார்த்தங்கள் சொல்லப்படுகின்றன. ஐந்து பதார்த்தங்களும் உண்டு. அவற்றைச் சுருக்கி மூன்று என்றார்கள். அந்த மூன்றே ஐந்து, ஏழு என்று விரியும். அது விரிவான விஷயம். இப்போதைக்கு நான் பூஜையில் நியாஸம், தியானம், பாவனை ஆகிய மூன்றைப்பற்றியும் சொல்லிவிடுகிறேன்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனியாகத் தியானம் இருக்கிறது.

ப்ராஸாதம் என்ற மந்திரம் மூலமந்திரம். ப்ராஸாதத்தைத் தெரிந்து கொள்ளாதவன் பூஜை பண்ண முடியாது. அந்த மந்திரத்தைப் பற்றிய விஷயங்களையெல்லாம் குருமூலமாக நாம் அறிந்துகொள்ளவேண்டும். 'ப்ராஸாத ஷட்ச்லோகீ' என்ற கிரந்தம், ஆறு ச்லோகங்களினால் அதை நன்றாக விளங்குகிறது.

மூலாதாரத்தில் குண்டலினி என்ற ஒரு நாடி இருப்பதை யோகசாஸ்திரம் சொல்கிறது. யோக சாஸ்திரத்தைப்பற்றிய பல விஷயங்கள், ஆகமங்களிலே வருகின்றன. பாம்பு சுருட்டிக்கொண்டு படுத்திருப்பது போலக் குண்டலினி கிடக்கும். சுருட்டையாக இருப்பதனால் குண்டலினி என்று பெயர் வந்தது. அந்தக் குண்டலினி நாடியினுள் கீழ்ப்பாகத்தில் ஒர் அக்ஷரம் படுத்துக்கொண்டிருக்கிறது. அதுதான் பீஜாக்ஷரம்.

குண்டலினி ஸ்தானத்தில் இருக்கும் கமலத்தில், பரமேசுவரன் வீற்றிருக்கிறான் என்று கல்பனை செய்யவேண்டும். அந்த மின்னல் போன்ற ஒளி உடைய அக்ஷரத்தை எழுப்பவேண்டும். மூளைபோன்ற வடிவத்தோடு அந்த அக்ஷரம் இருக்கிறது. அதனுடைய வியாபகம் நாபிவரையில் இருக்கிறது. இதை மேற்கொண்டு குருமுகமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிறகு பல்லவம் கூடிய மந்திரத்தை நியாஸம் செய்து ஆவாகனம் பண்ணவேண்டும். பல்லவம் என்பது, சப்தகோடி மகா மந்திரங்கள் தாம். அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், ஸ்நானம் எல்லாம் கொடுக்க வேண்டும். அவற்றுக்கெல்லாம் மந்திரங்கள் உண்டு. பிறகு சர்வேசுவரியைத் தியானம் செய்யவேண்டும். அவள் இல்லாத பூஜை இல்லை. அம்பிகையை ஒரு க்ஷணங்கூட இறைவன் பிரிந்திருக்கமாட்டான். ஆகவே சக்தியைத் தியானம் பண்ணவேண்டும்.

வர்ணங்களுக்குள்ளே ஈசுவரனுடைய சரீரத்தைக் கற்பனை பண்ணவேண்டும் என்று சொல்கிறார்கள். சிவாகமத்தில், மந்திரங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. அந்த மந்திரங்களே இறைவனுக்கு மாமிசம் ரத்தம் முதலிய தாதுவாக இருக்கின்றன.

பதம் என்பது 81 பதங்கள்: இவை மகா மந்திரங்கள். இந்த 81 மகா மந்திரங்களினால் இறைவனுக்கு நாடியையும், ரத்த மாமிச தாதுக்களையும் கல்பனை பண்ணவேண்டும்.

இவையெல்லாம் உணர்ந்து, இறைவனுக்குப் பூஜை பண்ணவேண்டும் என்று ஆகமத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்பிறகு பஞ்ச ஆவரணம் வருகிறது. ஆவரணம் என்பது

பிராகாரம். ஐந்து பிராகாரத்தினுடைய மத்தியில் இறைவன் இருக்கிறான் என்பதை ஆசாரியன் உணர வேண்டும்.

முதலாவது ஆவரணமாக இருப்பது பிரம்மாவரணம். எந்தப் பூஜையைப் பண்ணினாலும், இந்த ஆவரணம் மாறவே மாறாது. அது ஒரு விசேஷம். சிவாகமப்படி ஈசுவரன், கணபதி, முருகன், லட்சுமி ஆகிய தெய்வங்களை ஆராதிக்கும்படியாக இருந்தாலும், இந்தப் பிரதம ஆவரணம் மாறாது. பீஜாக்ஷரம் சில இடங்களில் மாறலாம். இறைவனுடைய அங்கங்களுக்கு எட்டு ஸம்ஸ்காரம் என்றும், இறைவனுக்குப் பத்து ஸம்ஸ்காரம் என்றும் கூறப்படுகிறது. இவை எல்லாம் ஞானபாதத்தினால் அறிய வேண்டிய விஷயங்கள்.

இரண்டாவது ஆவரணத்தில் வித்யேச்வரர்கள் இருக்கிறார்கள்: இறைவனுக்குப் பக்கத்திலே இருக்கும் அனந்தன் முதலிய எட்டும் பேர்கள். இவர்கள் இறைவனுக்குச் சமமான அந்தஸ்து உள்ளவர்கள். விஜ்ஞானகலர்கள் என்று பெயர். இவர்கள் வாயிலாகத்தான் இறைவன் உலகத்தை நடத்துகிறான்.

சக்தியின் பக்கத்தில் வாமாதிதேவிகள் மூன்றாவது ஆவரணத்தில் இருக்கிறார்கள். அங்குள்ள கணேசுவரர் எட்டுப் பேர்கள்தாம். நந்தி,

பிருங்கி முதலியவர்கள் மூன்றாவது ஆவரணத்தில் இடம் பெற்றார்கள். இவர்களையும் உபாஸிக்க வேண்டும்.

நான்காவது ஆவரணத்தில் இந்திராதிகள் உள்ளனர். இந்திரன், சந்திரன், அக்கினி முதலிய பத்துப் பேர்கள் இருக்கிறார்கள்.

ஐந்தாவது ஆவரணம் ஆயுதப் படை. நாங்கள் இதைப் போலீஸ் ஆவரணம் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இது இல்லாமல் பூஜை கிடையாது. வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், த்வஜம், கதை, திரிசுலம், பத்மம், சக்ரம் ஆகிய இந்தப் பத்து ஆயுதங்களும் இறைவன் பக்கத்திலே இருக்கும்.

ஆக இப்படி ஐந்து ஆவரணங்களுடன் ஈசுவரனைப் பூஜை பண்ணி, க்ஷமாபனம் பண்ணி, "என்னுடைய பூஜையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பிரார்த்திக்க வேண்டும்.

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்

குன்றே அனையாய், என்னைஆட் கொண்டே போதே கொண்டிலையோ?

இன்றோர் இடையூறெனக்குண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே

நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே"

என்று க்ஷமாபணம் செய்ய வேண்டும்.

இறைவனை உள்ளன்போடு தியானம் பண்ணவேண்டும். பெரிய சாதனங்கள் எல்லாம் வேண்டியதில்லை. எருக்கம்பூ, தும்பைப்பூ இருந்தால் போதும். இவற்றை உள்ளன்போடு ஈசுவரார்ப்பணம் செய்து விட்டால், போக லட்சியங்களை அவன் கொடுப்பான் என்று அப்பைய தீட்சிதர் கூறுகிறார். "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம், அம்மையே சிவலோகம் ஆள்வதற்கியாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறுகிறார்.

அகவே எது செய்தாலும் உள்ளன்போடு செய்து ஈசுவரார்ப்பணம் செய்தால், அவன் நமக்கு இகபரபோகங்களைக் கொடுப்பான். ஈசுவரனைப் பூஜிக்காத சரீரம் இருந்தும் பாழ். எத்தனை சாஸ்திரங்கள் படித்தாலும் பயன் இல்லை. உள்ளன்போடு ஈசுவரனைத் தியானம் செய்யவேண்டியது அவசியம்.